ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1376 / 9 – 2005 ජනවාරි 19 වැනි බදාදා – 2005.01.19

1376 /9 ஆம் இலக்கம் - 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை

( அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது )

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. - பீ. II/80II

### 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டம்

*1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் உணவு ஆலோசனைக் குழுவின் கலந்தாலோசனையுடன் சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**நிமல் சிறிபால டீ சில்வா,**
சுகாதார, போஷாக்கு மற்றும் ஊவா
வெல்லஸ்ஸ அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2005, சனவரி 17.

**ஒழுங்கு விதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2005 ஆம் ஆண்டின் உணவு (சுட்டுத் துண்டிடுதலும் விளம்பரப்படுத்துதலும்) ஒழுங்குவிதிகளென எடுத்துக்காட்டப்படலாம்.

2. சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக ஆளெவரும், பொதியொன்றில் அல்லது கொள்கலமொன்றில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் உணவுப் பொருளை அத்தகைய பொதி அல்லது கொள்கலம் இவ்வொழுங்குவிதிகளுக்கிணங்க சுட்டுத்துண்டு இடப்படாமல் விற்பனை செய்தல், விற்பனைக்கு முன்வைத்தல், விற்பனைக்கு வெளிக்காட்டி வைத்தல் அல்லது திறந்து வைத்தல் அல்லது விற்பனையின்பொருட்டு கொண்டு செல்லுதல் அல்லது விளம்பரம் செய்தல் ஆகாது:-

ஆயின், எவ்வாறாயினும், உணவானது, தன்மையில், தரத்தில், அளவில், தோற்றுவாயில், அல்லது வர்க்கத்தில் கொள்வனவு செய்பவரினால் கோரப்பட்டிருந்தும் அத்துடன் கொள்வனவு செய்பவரின் சமூகத்தில் நிறுக்கப்பட்டும், எண்ணப்பட்டும் அல்லது அளக்கப்பட்டும் இருந்தால் அத்தகைய ஏதேனும் பொதிக்கு இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாதலாகாது.

ஆயின் மேலும், ஒளி புகக்கூடிய கொப்பளமாயுள்ள பொதி செய்யும் பொருளைக்கொண்டு பொதி செய்யப்பட்ட முட்டைகளைக் கொண்டுள்ள ஏதேனும் பொதிக்கு, உள்ளடக்கத்தின் உற்பத்தித் தேதியும், காலாவதியாகும் தேதியும் பொறிக்கப்பட்டிருப்பின், இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையனவாதலாகாது.

3. (1) பொதியானது அல்லது கொள்கலமானது, அதில் அடங்கியுள்ள உணவுப் பொருட்கள் தொடர்பான விபரங்களைத் தெளிவாகவும் துலாம்பரமாகவும் வெளிக்காட்டும் சுட்டுத்துண்டு ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், அது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் அல்லது இவற்றில் ஏதாவது இரண்டு மொழிகளில் இருத்தலும் வேண்டும்.

(2) சுட்டுத்துண்டானது, உணவு உள்ளடக்கப்பட்டுள்ள பொதியின் அல்லது கொள்கலத்தில் பிரதான முகப்பில் அழியாதவாறு அச்சிடப்பட்டு அல்லது வரையப்பட்டு அல்லது ஒட்டப்பட்டு இருத்தல் வேண்டும்.

(3) உற்பத்தியாளரால் அல்லது பொதி செய்தவரால் பொதியில் அச்சிடப்பட்ட, வரையப்பட்ட அல்லது வெளிக்காட்டப்பட்ட மூல உற்பத்தித் தேதி, பொதி செய்த தேதி அல்லது காலாவதியாகும் தேதி என்பவற்றை ஆளெவரும் உருவழித்தல், திரிபுபடுத்தல், அழித்தல், அல்லது புரியாமல் செய்தல் ஆகாது.

(4) உணவு அடைக்கப்பட்டுள்ள அத்தகைய பொதிகளின் அல்லது கொள்கலன்களின் பிரதான முகப்பில் மூன்று மொழிகளுள் ஏதேனும் ஒரு மொழியில் சுட்டுத்துண்டானது ஒட்டப்பட்டிருந்து அத்துடன் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுமாறு மேலதிகமான சுட்டுத்துண்டொன்று ஏனைய இரு மொழிகளில் ஏதேனுமொரு மொழியில் அத்தகைய பொதியின் அல்லது கொள்கலத்தின் வேறு முகப்பொன்றில் தெளிவாகவும், துலாம்பரமாகவும் தெரியக்கூடியதாக தடித்த எழுத்தினால் அழியாதவாறு அச்சிடப்பட்டு அல்லது வரையப்பட்டு அல்லது ஒட்டப்பட்டு இருக்குமிடத்து, இவ் ஒழுங்குவிதியின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமானதாக இருக்கும்.

ஆயின், எவ்வாறாயினும், மேலதிகமான சுட்டுத்துண்டில் உள்ள உற்பத்தித் தேதி, பொதியாக்கிய தேதி, காலாவதியாகும் தேதி போன்ற சட்டத்தின்கீழ்த் தேவைப்படுத்தப்பட்ட வெளிப்படுத்துகைகளைக் கொண்டுள்ளபோது, அத்தகைய மேலதிகமான சுட்டுத்துண்டில் தயாரிப்பாளரினால் அல்லது பொதி செய்தவரினால் வெளிப்படுத்தப்பட்ட மூல உற்பத்தித் தேதி, காலாவதியாகும் தேதி என்பன உருவழியாதவாறு, திரிபு படுத்தாதவாறு, அழியாதவாறு அல்லது புரியாமல் செய்யாதவாறு திடமாக ஒட்டப்படுதல் வேண்டும்.

4. (1) பொதியின் அல்லது கொள்கலத்தின் பிரதான முகப்பில் கீழே குறிப்பிடப்பட்ட வெளிப்படுத்தல்கள் இருத்தல் வேண்டும் :–

(அ) மூன்று மொழிகளுள் எவையேனுமிரண்டு மொழிகளில் தெளிவான தடித்த எழுத்துக்களில் உள்ளடக்கத்தின் பொதுப் பெயர்;

(ஆ) வர்த்தகப் பெயர் அல்லது வியாபாரப் பெயர், அவ்வாறு ஏதேனும் இருக்குமாயின், மூன்று மொழிகளுள் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் எவரேனும் ஆளைத் தவறான பாதையில் இட்டுச் செல்லாதவாறானவொரு முறையில் ;

(இ) பொதியின் அல்லது கொள்கலனின் தேறிய உள்ளடக்கம் திடப்பொருள் தொடர்பானதெனின், "g" அல்லது "Kg" ஆகவும், திரவப் பொருட்களாயின் "ml " அல்லது "l" ஆகவும் திரவ ஊடகத்தில் பொதி செய்யப்பட்டிருப்பின் திரவம் நீக்கிய பின்பு தேறிய நிறை "g" அல்லது "Kg" ஆகவும் சர்வதேச குறியீடுகளின் மூலம் வெளிப்படுதல் வேண்டும் ;

ஆயின் எவ்வாறாயினும், பொதுப்பெயரானது, அட்டவணை I இல் தரப்பட்டுள்ள வேறு ஏதேனும் பெயரினால் பதிலீடு செய்யப்படலாம்.

(2) கீழே குறிப்பிடப்பட்ட வெளிப்படுத்துதல்கள் மூன்று மொழிகளில் ஒரு மொழியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைகளில் ஏதேனும் முகப்பில் இருத்தல் வேண்டும் :–

(அ) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளில் விதித்துரைக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட உணவுச் சேர்மானப் பொருளின் பெயர் அல்லது சர்வதேசக் குறியீட்டுமுறை ஐ. என். எஸ். (INS) இலக்கம் ;

(ஆ) களஞ்சியப்படுத்தல் மற்றும் உபயோகித்தல் பற்றிய அறிவுறுத்தல்கள், எவையேனும் இருப்பின் அவை ;

(இ) உற்பத்தி செய்தவரின் மற்றும் பொதி செய்தவரின் அல்லது இலங்கையில் விநியோகிப்பவரின் பெயரும் விலாசமும்;

(ஈ) தொகுதி எண் அல்லது குறியீட்டிலக்கம் அல்லது புரியக்கூடிய இரகசியமான குறியீட்டுக் குறிப்புக்கள் ;

(உ) காலாவதியாகும் திகதி ;

(ஊ) உற்பத்தி செய்த திகதி ;

(எ) உணவுப் பொருட்களை தொகையாக இறக்குமதி செய்து மற்றும் அவற்றை மீளப் பொதி செய்யும் விடயத்தில் உற்பத்தி செய்யப்பட்ட திகதியும் மற்றும் மீளப் பொதி செய்யப்பட்ட திகதியும் ;

(ஏ) அத்தகைய உணவுப் பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ள சேர்மானப் பொருட்களின் முழுமையான பட்டியலொன்று, அவற்றின் பொதுப் பெயர்களினரல் அவற்றின் விகிதாசார அளவின் இறங்கு வரிசைப்படி ;

(ஐ) இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருட்களின் விடயத்தில், உற்பத்தி செய்யப்பட்ட நாடு ;

(ஒ) இவ்வொழுங்கு விதிகளின் கீழ் விதித்துரைக்கப்பட்ட வேறு ஏதேனும் வெளிப்படுத்தல்கள் ;

ஆயின் எவ்வாறாயினும் திரவத் தன்மையான பால் மற்றும் காபனீரொட்சைட்டைக் கொண்ட (வாயுவேற்றப்பட்ட) மென் பானங்கள் அடங்கியுள்ள போத்தல்களின் விடயத்தில், காலவதியாகும் திகதியானது, போத்தல்களின் மூடிகளில் பொறிக்கப்படலாம் என்பதுடன், உணவுப் பொருட்கள் அடங்கியுள்ள உலோகக் கொள்கலன்களின் விடயத்தில் காலாவதியாகும் திகதியானது, ஒன்றில் அவ்வுலோகக் கொள்கலன்களின் உச்சியில் அல்லது அடியில் உள்ள மூடியில் அழிக்க முடியாதவாறு குறிப்பிடப்படலாம் ;

ஆயின் மேலும், மொத்த விற்பனைப் பொதிகளில் உள்ள தானியங்களுக்கும், பருப்பு வகைகளுக்கும், சீனி, தேயிலை, புதிய காய்கறிகள், பழங்கள், கிழங்குகளும் வேர்களும் மற்றும் துண்டுகளாக வெட்டப்பட்ட பாண் தவிர்ந்த ஏனைய பாண் என்பவற்றுக்குக் காலாவதியாகும் திகதியானது தேவைப்படுத்தப்படமாட்டாது.

(3) இவ்வொழுங்கு விதிகளுக்கமையச் சுட்டுத்துண்டு இடப்பட்டு வாடிக்கையாளர்களுக்கு விற்பனை செய்யும் பொதியில் அல்லது கொள்கலனில் இருநது விற்பனை செய்யப்படும் பொதி செய்யப்பட்ட 25 கிராம் நிறையை விஞ்சாத உணவு உற்பத்திப் பொருட்களுக்கு இவ்வொழுங்குவிதிகள் ஏற்புடையதாதலாகாது.

(4) ஆளெவரும்,காலாவதியான பின்னர் ஏதேனும் உணவுப் பொருளை விற்பனை செய்தல், விற்பனைக்கு முன்வைத்தல், விற்பனையின் பொருட்டு வெளிக்காட்டி வைத்தல் அல்லது திறந்து வைத்தல் அல்லது விற்பனையின் பொருட்டு கொண்டு செல்லல் ஆகாது.

5. (1) ஒழுங்குவிதி 4 இன் நோக்கங்களுக்காக –

(அ) பொதுப் பெயருக்குப் பயன்படுத்தும் எழுத்துக்களின் அளவு உயரத்தில் குறைந்த பட்சம் 3 மில்லி மீற்றர் ஆக இருக்குமாறு வர்க்கப் பெயருக்குப் பாவிக்கப்பட்ட எழுத்துக்களின் அளவில் மூன்றில் ஒரு பகுதிக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். பொதுப் பெயரானது ஒரு சொல்லாக அல்லது ஒரு சொல்லுக்கு அதிகமான எண்ணிக்கையைக் கொண்டுள்ளதாயின் அததகைய சொல் அல்லது சொற்கள் (இடைச் சொற்கள், இணைச் சொற்கள் மற்றும் சுட்டுச் சொற்கள் நீங்கலாக) அளவுகளிலும் வடிவங்களிலும் சமமாக இருத்தல் வேண்டும் என்பதுடன், ஒரே மாதிரியாக வெளிப்படுத்தப்பட்டு இருத்தலும் வேண்டும் ;

(ஆ) ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் மேலதிக சுட்டுத் துண்டில் பொதுப் பெயரைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தும் எழுத்துக்களின் அளவானது, ஆகக் குறைந்தது உயரத்தில்3 மில்லி மீற்றருக்கு அமைவாக, பொதியின் அல்லது கொள்கலத்தின் பிரதான முகப்பில் பொதுப் பெயரைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்ட எழுத்துக்களின் உயரத்தில் அரைப்பங்கிற்குக் குறையாததாகவிருத்தல் வேண்டும் ;

(இ) உற்பத்தியொன்றின் தேறிய நிறை 25 கிராமிலும் குறைவாக அல்லது தேறிய கனவளவு 30 மில்லிலீற்றர்களுக்கு மேற்படாது இருக்குமிடத்து எழுத்துக்களின் உயரத்தின் அளவு 1.5 மில்லி மீற்றர்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும் ;

(ஈ) பொதியின் மேற்பக்கப் பரப்பளவு 25 சதுர சென்றி மீற்றரை விட அதிகமாகாதவிடத்து, பிரதான உணவு அதிகாரி தேறிய நிறையை வெளிப்படுத்துவதினின்றும் விலக்களிப்பை அனுமதிக்கலாம் ;

(உ) நாலாம் ஒழுங்குவிதியின் (1) (இ), (2) (உ) மற்றும் (2) (ஊ) என்னும் பந்திகளின் நியதிகளின்படி முறையே வெளிப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் எழுத்துக்கள் தெளிவான தடித்த எழுத்துக்களில் இருக்க வேண்டும் என்பதுடன், அவைகளின் உயரத்தின் அளவு இதற்கான அட்டவணையின் 11 ஆம் நிரலின் நேரொத்த பதிவில், குறிப்பிடப்பட்டுள்ள சுட்டுத்துண்டின் பிரதான முகப்பின் பரப்பளவு தொடர்பில் அட்டவணையின் 1 ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள உயரத்தை விடக் குறையாததாக இருத்தலும் வேண்டும் ;

(ஊ) பந்தி (உ) இலுள்ள வெளிப்படுத்துதல்கள் வெளிப்படுத்துதல்கள் தவிர்ந்த ஏனைய வெளிப்படுத்துதல்கள் உயரத்தில் 1.5 மில்லி மீற்றருக்குக் குறையாமல் தெளிவாகத் தடித்த எழுத்துக்களினால் அச்சிடப்பட்டு இருத்தல் வேண்டும். சிறிய பையின் விடயத்தில் வெளிப்படுத்துகைகள் புடைத்திருக்கும்படி செய்யப்படும் பொழுது, எழுத்துக்கள் தடித்த எழுத்துக்களில் இருத்தல் வேண்டும். ஆயின் எவ்வாறாயினும் பானங்களைக் கொண்டுள்ள போத்தல்களின் மூடிகளில் உள்ள எவையேனும் வெளிப்படுத்துகைகளில் பயன்படுத்தும் எழுத்துக்களின் அளவு உயரத்தில் 1 மில்லி மீற்றருக்குக் குறைவாக இருத்தல் ஆகாது :

(எ) பொதியொன்றில் அல்லது கொள்கலமொன்றில் உள்ளடக்கப்பட்டுள்ள உணவுப் பொருளின் காலாவதியாகும் திகதியானது நாள், மாதம், ஆண்டு அல்லது ஆண்டு, மாதம், நாள் என்ற வரிசையில் எண்களில் வெளிப்படுத்தப்படலாம்; ஆயின் ஆண்டானது நான்கு இலக்கங்களில் இருப்பதுடன் "காலாவதியாகும் தேதி" என்னும் சொல்லையோ அல்லது "கா.தேதி" என்ற குறுக்கத்தையும் அல்லது சிங்கள மொழியில் "කා.ඉ.දි." என்ற குறுக்கத்தையும் மற்றும் ஆங்கில மொழியில் "Expiry" என்னும் சொல்லையோ அல்லது "Exp" என்னும் குறுக்கத்தையோ அதற்குமுன்னர் குறிப்பிடுதலும் வேண்டும்.

ஆயின் ஆண்டானது இரண்டு இலக்க முறையில் குறிப்பிடப்படுமிடத்து வடிவமானது நாள், மாதம், ஆண்டு என்னும் ஒழுங்கில் இருத்தல் வேண்டும்.

ஆயின் மேலும், காலாவதித் திகதியாக, மாதமும் வருடமும் மட்டுமே சுட்டிக்காட்டப்படுமிடத்து, அவ்வுற்பத்திப்பொருளின் காலாவதித் திகதியானது அம்மாதத்தின் இறுதி நாளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(ஏ) பொதியொன்றில் அல்லது கொள்கலனில் உள்ளடக்கப்பட்டுள்ள உணவுப் பொருள் ஒன்றில் "உற்பத்தித் தேதி" நாள், மாதம், ஆண்டு அல்லது ஆண்டு, மாதம், நாள், என்ற வரிசையில் குறித்துரைக்கப்படலாம். ஆயின் ஆண்டானது நான்கு இலக்கத்தில் இருப்பதுடன் "உற்பத்தித் தேதி" அல்லது "உ. தேதி" என்ற குறுக்கத்தையும் அல்ல சிங்கள மொழியில் නිෂ්පාදන දිනය அல்லது නි. දි. என்ற குறுக்கத்தையும் மற்றும் ஆங்கில மொழியில் "Manufactured Date" அல்லது "M. F. D" என்ற குறுக்கத்தையும் உற்பத்தித் தேதிக்கு முன்னால் குறிப்பிடுதல் வேண்டும்.

ஆயின் ஆண்டானது இரண்டு இலக்கங்களினால் குறித்துரைக்கப்படும்போது வடிவமானது நாள், மாதம், வருடம், என்ற ஒழுங்கில இருத்தல் வேண்டும்.

(ஐ) பந்தி (எ) என்பதன் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் சரி, காலாவதியாகும் திகதி இரண்டு இலக்க வடிவத்தில் சுட்டிக்காட்டப்படலாம். ஆயின், விடயத்திற்கேற்ப நாள், மாதம், ஆண்டு என்பவற்றைக் குறிக்கும் "நாநா/மாமா/ஆஆ" அல்லது ஆண்டு, மாதம், நாள் என்பவற்றை குறிக்கும் "ஆஆ/மாமா/நாநா" என்னும் சுட்டுதலானது இலக்கங்களிற்கு மேலே அச்சிடப்பட்டிருத்தலோடு, "காலாவதியாகும் தேதி" என்னும் சொல் அல்லது "கா.தேதி" என்னும் குறுக்கமானது மூன்று மொழிகளுள் ஏதேனுமிரண்டு மொழிகளில் முன்னதாக அச்சிடப்படுதலும் வேண்டும்.

(ஒ) பந்தி (ஏ) என்பதன் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் சரி, காலாவதியாகும் திகதி இரண்டு இலக்க வடிவத்தில் சுட்டிக்காட்டப்படலாம். ஆயின், விடயத்திற்கேற்ப நாள், மாதம், ஆண்டு என்பவற்றைக் குறிக்கும் "நாநா/மாமா/ஆஆ" அல்லது ஆண்டு, மாதம், நாள் "என்பவற்றை குறிக்கும் "ஆஆ/மாமா/நாநா" என்னும் சுட்டுதலானது இலக்கங்களிற்கு மேலே அச்சிடப்பட்டிருப்பதோடு, "உற்பத்தித் தேதி" என்னும் சொல் அல்லது "உ.தேதி" என்னும குறுக்கமானது மூன்று மொழிகளுள் ஏதேனும் ஒரு மொழியில் முன்னதாக அச்சிடப்படுதலும் வேண்டும்.

(2) பந்தி 1 (உ) இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் சரி, பொதியொன்றில் அல்லது கொள்கலமொன்றில் உள்ளடக்கப்பட்டுள்ள உணவுப் பொருள் தொடர்பில் காலாவதியாகும் திகதியானது துளையிடுதல் முறையினால் வெளிப்படுத்தப்படலாம்.

ஆயின், "காலாவதியாகும் திகதி" என்னும் சொல்லுக்குப் பதிலாக "தேதிக்கு முன் பாவிக்கவும்" அல்லது "தேதிக்கு முன் மிக நல்லது" என்னும் சொற்களைப் பயன்படுத்தலாம்.

ஆயின், "Expiry" என்ற சொல் அல்லது "Exp" என்ற குறுக்கமும் மற்றும் தமிழில் "கா.தேதி" அல்லது சிங்களத்தில் "කා.ඉ.දි." எனும் குறுக்கமும் துளையிடப்பட்ட திகதிக்கு முன்பதாக அச்சிடப்பட்டிருத்தல் வேண்டும்.

இந்த ஒழுங்குவிதியில் நோக்கத்துக்காக "தேதிக்கு முன பாவிக்கவும்" மற்றும் "தேதிக்கு முன் மிக நல்லது" என்ற சொற்றொடர்கள் "காலாவதியாகும் தேதி" என்றவாறான அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

6. (1) சலாட் எண்ணெய், மரக்கறி எண்ணெய், கலப்பு மரக்கறி எண்ணெய் என்று அல்லது வேறு ஏதேனும் பெயரில் அல்லது விபரணத்துடன் குறிப்பிடப்பட்டு உணவின் பொருட்டுப் பாவிக்கப்படக்கூடிய ஏதேனும் எண்ணெயானது (ஏதேனும் தூய்மைப்படுத்தப்பட்ட எண்ணெய் உட்பட) அவைகளின் பொதுப் பெயர்களையும் மற்றும் அவைகள் எந்த மூலத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டன என்பதையும் தெளிவாகவும் துலாம்பரமாகவும் தெரியக்கூடியவாறும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) பந்தி (1) இன் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும் –

(அ) ஏதேனும் கலப்பு மரக்கறி எண்ணெய் அக்கலவையில் சதவீதத்தைக் (75%) கொண்டிருக்கும் எண்ணையின் பெயரில் "கலப்பு மரக்கறி எண்ணெய்" எனச் சுட்டுத் துண்டிடப்படலாம் ஆயின் அதன் சேர்மானப் பொருட்களின் விகிதாசாரங்கள் சுட்டுத்துண்டில் வெளிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) கலப்பு மரக்கறி எண்ணெயின் தனியான சேர்மானப்பொருள் எதுவும், அத்தகைய கலவையின் சதவீதத்தை (75%) விஞ்சாமலிருக்குமிடத்து அது "கலப்பு மரக்கறி எண்ணெய்" எனச் சுட்டுத் துண்டிடப்படுத்தல் வேண்டும், ஆயின் அதன் சேர்மானப்பொருட்களின் விகிதாசாரங்கள் சுட்டுத்துண்டில் வெளிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(3)(அ) சீனியினால் தயாரிக்கப்பட்ட எவையேனும் இனிப்புப் பண்டங்களின் அல்லது சொக்லேற்று உற்பத்திப் பொருள்களின் விவரணமொன்றில், அவற்றின் உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட கொழுப்பின் நிறையில், அதில் உள்ளடங்கியுள்ள வெண்ணெய் கொழுப்பானது நிறையில் 4 சதவீதத்திற்கு குறையாமல் இருந்தாலன்றி;

(ஆ) மாவினால் தயாரிக்கப்பட்ட எவையேனும் இனிப்புப் பண்டங்களின் அல்லது சொக்கலேற்று உற்பத்திப் பொருட்களின் விபரணமொன்றில், அதில் பயன்படுத்தப்பட்ட கொழுப்பானது முழுமையாகவே வெண்ணெய்க் கொழுப்பாக இருந்தாலன்றி;

சுட்டுத்துண்டெதுவும் "வெண்ணெய்" என்னும் சொல்லையோ அல்லது அதன் பொருட்டு பாவிக்கப்படும் சமமான சொல்லையோ அல்லது வெண்ணெய் உள்ளடக்கப்பட்டுள்ளதெனக் கருதக்கூடிய வகையிலான எந்தச் சொல்லையோ கொண்டிருத்தல் ஆகாது.

7. (1) பொதியிடப்பட்ட உணவுப்பொருளொன்று, ஏதேனும் சுட்டுத்துண்டில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அது வேறு ஏதேனும் உற்பத்திப்பொருள் என்று கருதக்கூடியவாறு அல்லது குறிக்கக்கூடியவாறு மனக்குழப்பமான முறையில் அல்லது அத்தகைய வேறு உற்பத்திப்பொருளுடன் அவ்வுணவு தொடர்புடையது என்று கொள்வனவு செய்வோர் அல்லது பாவனையாளர்கள் கருதக்கூடிய வகையில் சொல்லினால், சித்திரத்தினால் அல்லது வேறு உபாயங்களினால் விபரிக்கப்படுதல் அல்லது அறிமுகப்படுத்தப்படுதல் ஆகாது.

(2) நேரடியாகப் பருகுவதற்கான அல்லது மீண்டும் கலந்து தயாரிக்கப்படுவதற்கான இருக்கும் பழத்தை அடிப்படையாகக் கொண்ட பானங்கள், இதற்கான அட்டவணை III இல் அவற்றிற்கெனக் குறித்துரைக்கப்பட்டுள்ள அளவுக்கு இணங்கியொழுகும் முறையில் அத்தகைய பழத்தின் பழச்சாறுகளின் அளவைக் கொண்டிருந்தாலன்றி, குறிப்பிடப்பட்ட பழச்சாற்றினால் தயாரிக்கப்பட்ட பானமென ஏதேனும் சுட்டுத்துண்டில் அல்லது விளம்பரத்தில் விபரிக்கப்படக்கூடாது என்பதுடன், அவ்வாறில்லாதுவிடின் விடயத்திற்கேற்ப, அது "செயற்கையான பழச்சாறு", "செயற்கையான பழப்பிழிவு", அல்லது "செயற்கையான பானம்"; என விபரிக்கப்படுதலும் வேண்டும்.

(3) தாவர உற்பத்திப் பொருட்களின் நொதித்தல் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட வினாகிரிகளைத் தவிர்ந்த ஏனைய வினாகிரியைக் கொண்ட போத்தல் அல்லது கொள்கலன் மீது "செயற்கையான வினாகிரி" எனச் சுட்டுத்துண்டு இடப்படுதல் வேண்டும்.

(4) இவ்வொழுங்கு விதியின் (2) ஆம் (3) ஆம் பந்திகளில் "செயற்கையானது" எனக் குறிப்பிடப்பட்ட ஏதேனும் உணவுப் பொருள் தொடர்பான ஏதேனும் சுட்டுத் துண்டில் அல்லது விளம்பரமொன்றில் -

(அ) உற்பத்திப்பொருளின் பெயருக்கு மிகவும் அண்மையாக "செயற்கையானது" என்னும் சொல் தெளிவாகவும் துலாம்பரமாகவும் தெரியக்கூடிய வகையிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அச்சொல்லின் பொருட்டுப் பாவிக்கப்படும் எழுத்துக்களின் வகையும் அளவும் உற்பத்திப்பொருளின் பொதுப்பெயரின் பொருட்டுப் பயன்படுத்தப்பட்ட அதே வகையும் அளவுமாக இருத்தலும் வேண்டும்.

(ஆ) அத்தகைய உற்பத்திப் பொருளின் விபரணத்தில் "பழம்" என்னும் சொல்லையோ அல்லது ஏதேனும் பழத்தின் சித்திரத்தையோ கொண்டிருத்தல் ஆகாது ;

(இ) வினாகிரியுடன் தொடர்புடைய ஏதேனும் தாவரத்தின் அல்லது தாவர உற்பத்திப்பொருளின் சித்திரத்தில் வெளிப்படுத்தலெதுவும் இருத்தல் ஆகாது ;

(5) பந்திகள் (2) மற்றும் (4) என்பவற்றிலுள்ள ஏற்பாடுகள் வாயுவூட்டப்பட்ட மென்பானங்களுக்கு ஏற்புடைத்தாதலாகாது.

08. (1) பழவகைகளைப் பயன்படுத்திக் கொள்ளாது செய்யப்பட்ட இனிப்புப் பண்டங்கள், சொக்கலேற்றுக்கள், விசுக்கோத்துக்கள் அல்லது இதைப்போன்ற உற்பத்திப் பொருட்கள், பழவகைகள் அல்லாதவற்றைப் பயன்படுத்திக் கொண்டு செய்யப்பட்ட குடிபானங்களின் கலவைகள், உணவுறுதி இனிப்புண்டி உற்பத்திகள் தொடர்பாகப் பழமொன்றின் பெயரை அல்லது பழங்களின் பெயர்களை அல்லது பழமொன்றின் அல்லது பழவகைகளின் சித்திரமொன்றை சுட்டுத்துண்டில் குறிப்பிடலாம்.

ஆயின், பழவகைகள் அல்லாதனவற்றை உபயோகித்துக் கொண்டு செய்யப்பட்ட குடிபானங்களின் கலவைகள் மற்றும் உணவுறுதி இனிப்புண்டி உற்பத்திகள் தொடர்பில் செயற்கையான "சுவையூட்டப்பட்ட குடிபானங்களின் கலவைகள்" "X" சுவையூட்டப்பட்ட உணவிறுதி இனிப்புப்பண்ட உற்பத்திகள் " என்னும் பொதுப்பெயர் சுட்டுத்துண்டின் பிரதான முகப்பில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். இங்கு "X" என்பது பழம் அல்லது பழங்களைக் குறிக்கும்.

09. (1) ஏதேனும் உணவுப் பொருளிற்காக சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட எவையேனும் ஒழுங்கு விதிகளில் தரம் ஒன்று குறிப்பிடப்பட்டிருக்கும் பொழுது அத்தகைய தரத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சேர்மானப் பொருட்கள் மட்டுமே அத்தகைய உணவுப் பொருளில் பயன்படுத்தப்படுதல் வேண்டும், வேறு சேர்மானப் பொருட்களைச் சேர்த்தல் அல்லது கலவை செய்தல் அத்தகைய சேர்மானப் பொருட்கள் தொடர்பில் சுட்டுத்துண்டு ஒன்று அல்லது வெளிப்படுத்துகையொன்று இருப்பினும் சரி அல்லது இல்லாவிடினும் சரி முற்றிலுமாகத் தடுக்கப்படுதல் வேண்டும் ;

(2) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளில் தரம் நியமிக்கப்படாத ஏதேனும் உணவுப் பொருளானது சேர்க்கையொன்றை, கலவையொன்றை அல்லது ஏதேனும் குறைபாட்டைக் கொண்டிருக்குமிடத்து, அத்தகைய உணவுப் பொருள் தொடர்பான சுட்டுத்துண்டில் அல்லது விளம்பரத்தில் அவ்வாறான சேர்க்கையை, அல்லது கலவையை அல்லது குறைபாட்டைப் பற்றிய வெளிப்படுத்துகை இருத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளிப்படுத்துகையானது விடயத்திற்கேற்ப, அத்தகைய சேர்க்கையின் அல்லது கலவையின் அல்லது குறைபாடாக இருக்கும் சேர்மானப்பொருளின் பெயரையும் நூற்று வீதத்தையும் தெளிவாக தெரிவித்தலும் வேண்டும்.

10. (1) கதிர்வீச்சுக்கு உட்படுத்தப்பட்ட உணவுப்பொருளொன்றின் சுட்டுத் துண்டானது அத்தகைய பயனைக் கொண்ட, எழுத்திலான கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள சர்வதேசக் குறியீடானது பொதுப் பெயருக்கு மிகவும் அண்மையில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.



(2) கதிர்வீச்சுக்குட்படுத்தப்பட்ட உற்பத்திப் பொருளொன்று வேறு ஏதேனும் உணவுப் பொருளின் சேர்மானப் பொருளாகப் பயன்படுத்தப்படுமிடத்து அத்தகைய உற்பத்திப் பொருளானது இவ்வொழுங்குவிதியின் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட முறையில் சேர்மானப் பொருட்கள் பட்டியலில் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

(3) கதிர்வீச்சுக்குட்படுத்தப்பட்ட ஒரு மூலப்பொருளிலிருந்து தனித்த சேர்மான உற்பத்திப்பொருளொன்று தயாரிக்கப்படுமிடத்து, அவ் உற்பத்திப் பொருளின் சுட்டுத்துண்டானது அத்தகைய செய்முறையைக் குறிப்பிடும் கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

11. பிரதான உணவு அதிகாரியால் அனுமதிஅளிக்கப்பட்டிருந்தாலன்றி ஏதேனும் உணவுப் பொருள் தொடர்பான சுட்டுத்துண்டு அல்லது விளம்பரம் எதுவும், வைத்திய உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது வைத்தியச் சங்கம் ஒன்றினால் அல்லது எவரேனும் உயர்தொழில் உத்தியோகத்தரால் அது சிபார்சு செய்யப்பட்டுள்ளதாகக் காட்டும் சொற்களைக் கொண்டிருத்தலோ அல்லது எவரேனும் வைத்திய உத்தியோகத்தரினால், சங்கத்தினால் அல்லது உயர்தொழில் உத்தியோகத்தரினால் அத்தகைய உணவுப் பொருள் சிபார்சு செய்யப்பட்டுள்ளதென, அல்லது விதித்துரைக்கப்பட்டுள்ளதென அல்லது அனுமதிக்கப்பட்டுள்ளதெனக் காட்டும் அல்லது அதே கருத்தைத்தரும் வேறு சொற்களை அல்லது உபாயங்களை, அல்லது சித்திரங்களை அல்லது வேறு வகையானதைக் கொண்டிருத்தலோ ஆகாது.

12. பிரதான உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியினால் அங்கீகாரம் அளிக்கப்பட்டிருந்தாலன்றி, ஏதேனும் உணவுப்பொருள் தொடர்பான சுட்டுத்துண்டெதுவும் அல்லது விளம்பரம் எதுவும், அத்தகைய உணவுப் பொருள் விசேட குணவியல்புகளைக் கொண்டது என்ற கூற்றையோ அல்லது உரிமை கோரலையோ கொண்டிருத்தல் ஆகாது.

13. (1) ஏதேனும் உணவுப் பொருள் தொடர்பான சுட்டுத்துண்டு எதுவும், கொள்வனவு செய்பவரை அல்லது அத்தகைய உணவை நுகர்வோரை, தவறான வழியில் இட்டுச் செல்லக்கூடிய அல்லது எவ்வகையிலேனும் தவறான எண்ணக்கருவை உண்டு பண்ணும் விதத்தில் பிழையான கூற்றொன்றையோ அல்லது உரிமை கோரலொன்றையோ அல்லது விவரணத்தையோ கொண்டிருத்தலாகாது;

(2) உணவுப் பொருள் எதுவும் அதன் குணம் தொடர்பில், பொய்யான அல்லது தவறான வழியில் இட்டுச்செல்லக்கூடிய அல்லது ஏமாற்றுகின்ற விதத்தில் அல்லது தவறான எண்ணத்தைத் தோற்றுவிக்கும் விதத்தில் விபரிக்கப்படுதலோ அல்லது முன் வைக்கப்படுதலோ ஆகாது.

(3) இவ்வொழுங்கு விதியின் நோக்கத்திற்காக "உரிமைக்கோரல்" என்பது ஏதேனும் உணவொன்றின் தோற்றுவாய், போஷாக்கு குணவியல்புகள், தன்மை, தயாரிப்புக் கூட்டுப்பொருட்கள் அல்லது வேறு ஏதேனும் விசேட தகைமை தொடர்பில் குறிப்பிடக்கூடிய தகைமை உண்டு எனக் கூறும், தெரிவிக்கும் அல்லது எண்ணத்தை உண்டு பண்ணும் ஏதேனும் வெளிப்படுத்துகை என்று பொருளாகும்.

ஆயின் இதற்கான V ஆம் அட்டவணையின் அ என்னும் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுவன்வாக இருந்தால் மட்டுமே உணவுப் பொருட்களின்மீது போஷாக்கு உரிமைக்கோரல்கள் பயன்படுத்தப்படலாம்.

(4) ஏதேனும் உணவுப்பொருள் தொடர்பான சுட்டுத்துண்டெதுவும் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்கு விதிகளின் கீழ் விதித்துரைக்கப்பட்டுள்ள குணவியல்பு, பெறுமதி, கூட்டுப்பொருட்கள் மற்றும் தகைமைகளைக் கொண்டும் அத்துடன் அவ்வுணவுப் பொருள் எவ்வகையான கூட்டுப் பொருளையேனும் கொண்டு இல்லாமலும் இருந்தாலன்றி, அவ்வுணவுப்பொருள் தொடர்பான விபரணத்தில் "தூய்மையானது" என்னும் சொல்லையோ அல்லது அவ்வுணவுப்பொருள் தூய்மையானதென என்ற கருத்தைத் தரக்கூடியவாறான வேறு எவையேனும் சொற்களையோ கொண்டிருத்தலாகாது.

(5) ஏதேனும் உணவு உற்பத்திப்பொருளின் சுட்டுத்துண்டெதுவும், அதன் விபரணத்தில் –

(அ) அத்தகைய உணவுப்பொருள் அல்லது உணவுற்பத்திப்பொருள், கூட்டுப்பொருட்களைக் கொண்டு கலப்படம் செய்யப் படாததான, அல்லது பதனிடப்படாததான உற்பத்திப் பொருளாகவில்லாதவிடத்து, "இயற்கையானது" என்னும் சொல்லைக் கொண்டிருத்தலாகாது ; ஆயினும் அது பாஸ்டர் முறைக்குட்படுத்தல், குளிரூட்டல் அல்லது அதி குளிரூட்டல் என்பவற்றிற்கு உட்படுத்தப்படலாம்.

(ஆ) அத்தகைய உணவுப் பொருள் அல்லது உணவு உற்பத்திப் பொருள் செயற்கை மூலப் பொருட்களிலிருந்து முற்றிலும் வேறுபட்ட உயிரியல் மூலப் பொருட்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டதாகவில்லாதவிடத்து, "இயற்கையானது" என்னும் சொல்லைக் கொண்டிருத்தலாகாது.

(6) ஏதேனும் உணவுப் பொருள் தொடர்பாக சுட்டுத்துண்டெதுவும், அத்தகைய உணவுப்பொருட்களின் விபரணத்தில் குறிப்பிடப்படுவதற்கு சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியின் கீழ் அத்தகைய வேறு உணவுப்பொருளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தாலன்றி உணவுப்பொருளின் "பதிலி" என்றோ அல்லது பதிலி எனக் குறிப்பிடும் வேறு சொல்லையோ கொண்டிருத்தல் ஆகாது.

(7) (1) ஏதேனும் உணவுப் பொருள் தொடர்பிலான சுட்டுத்துண்டு அல்லது விளம்பரம் எதுவும் –

(அ) அத்தகைய உணவுப்பொருளின் சுட்டுத்துண்டானது அல்லது விளம்பரமானது அவ்வுணவுப்பொருளின் போஷாக்கின் உள்ளடக்கத்தையும் மற்றும் நாளாந்த பாவனை அளவையும் தருகின்ற வெளிப்படுத்துகையொன்றைக் கொண்டிருந்தாலன்றி, அவ்வுணவுப்பொருளானது விசேட போஷாக்குப் பெறுமதியொன்றைக் கொண்டுள்ளது என்ற கூற்றொன்றையோ அல்லது உரிமைக்கோரலொன்றையோ கொண்டிருத்தலாகாது ; அல்லது.

(ஆ) அத்தகைய உணவுப்பொருளின், நாளொன்றுக்குப் பொதுவாகப் பாவிக்கப்படுவதற்குக் கருதப்படும் அளவு, இதற்கான IV ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறான அத்தகைய போஷாக்குப் பதார்த்தங்களின் நாளாந்த உணவாகக் கொள்ளப்படுவதற்கு விதப்புரை செய்யப்பட்ட அளவின் மூன்றிலொரு பங்கைக் கொண்டிருந்தாலன்றி அத்தகைய உணவுப்பொருளானது போஷணைப் பதார்த்தங்களில் ஒன்று அல்லது அதற்கு அதிகமானவற்றின் போதுமான அளவிலான தோற்றுவாயெனக் கூறும் கூற்றொன்றையோ அல்லது உரிமைக் கோரலொன்றையோ கொண்டிருத்தலாகாது ; அல்லது

(இ) அத்தகைய உணவுப் பொருளின் நாளொன்றுக்குப் பொதுவாகப் பாவிக்கப்படுவதற்குக் கருதப்படும் அளவு நாளாந்தம் உட்கொள்வதற்கு விதப்புரை செய்யப்பட்டுள்ள காபோவைதரேற்று, புரதம், கொழுப்பு, உயிர்ச்

சத்துக்கள், அல்லது கனிப்பொருட்கள் என்பவைகளின் அளவுகளில் ஆகக் குறைந்த 5 சதவீதத்தையேனும் (5%) கொண்டு அவ் உணவுப் பொருள் சுட்டுத்துண்டில் அல்லது விளம்பரத்தில் வெளிப்படுத்தல் ஒன்றைக் கொண்டிருந்தாலன்றி அத்தகைய உணவுப் பொருள் விடயத்திற்கேற்ப காபோஹைதரேற்று, புரதம், கொழுப்பு, உயிர்ச்சத்துக்கள் அல்லது கனிப்பொருட்கள் என்பவற்றைக் கொண்ட உணவுப்பொருளென்ற கூற்றொன்றையோ அல்லது உரிமைக் கோரிக்கை யொன்றையோ கொண்டிருத்தல் ஆகாது. இவ் ஒழுங்குவிதியின் நோக்கத்திற்காக விதப்புரை செய்யப்பட்டுள்ள நாளாந்த உணவின் அளவானது இதற்கான IV ஆம் அட்டவணையில் தரப்பட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும்.

(ii) ஏதேனும் உணவுப் பொருள் தொடர்பான சுட்டுத்துண்டெதுவும் அல்லது விளம்பரமெதுவும் -

(அ) நாளொன்றுக்குப் பாவனைக்கு எடுத்துக் கொள்வதற்குப் பொதுவாக எதிர்பார்க்கப்பட்ட புரதத்தின் அளவில் ஆகக்குறைந்தது 12 கிராம்களை வழங்காமலும்;

(ஆ) அதன் சக்திப் பெறுமதியில் குறைந்த பட்சம் 20 சதவீதமாவது(20%) புரதத்திலிருந்து அளிக்கப்படாமலும், அத்துடன்;

(இ) புரதத்தின் உள்ளடக்கம் உணவுப்பொருளின் 100 கிராம்களில் அல்லது 100 மில்லிலீற்றர்களில், கிராம்களில் அல்லது மில்லி லீற்றர்களில் எவ்வளவு என்ற சுட்டுத்துண்டில் தெரிவிக்காமலும்;

அத்தகைய உணவுப்பொருளானது புரதத்தின் தோற்றுவாயொன்றென்று கூறுதலோ அல்லது சுட்டிக்காட்டுதலோ ஆகாது.

(iii) ஏதேனும் உணவுப் பொருள், இயற்கையாக அடங்கியுள்ள பொருட்களுக்கு மேலதிகமாகச் சேர்க்கப்பட்ட உயிர்ச்சத்துக்கள், கனிப்பொருட்கள் அல்லது அமினோ அமிலங்கள் என்பவற்றைக் கொண்டிருந்தாலன்றியும் அத்துடன் அவ்வாறான உள்ளடக்கங்களின் நூறுவீதம் சுட்டுத்துண்டில் வெளிப்படுத்தப்பட்டிருந்தாலன்றியும், அத்தகைய உணவுப் பொருளின் சுட்டுத்துண்டு அல்லது விளம்பரம் எதுவும், அத்தகைய உணவுப் பொருள் போஷாக்குக்கொண்டு வளமாக்கப்பட்டவோர் உணவெனச் சுட்டிக்காட்டுதல் ஆகாது.

(iv) அதன் சக்தியூட்டும் எல்லைகள் மீதான பிரதான உணவு அதிகாரியின் அங்கீகாரத்துக்கமைவாக, ஏதேனும் உணவுப்பொருளில் சேர்க்கப்பட்ட ஏதேனும் போஷாக்குப் பதார்த்தமானது அவ்வுணவுப் பொருளில் இயற்கையாகவே காணப்படும் போஷாக்குப் பதார்த்தமாக இல்லாதிருந்தாலன்றி, அது வலுவாக்கப்பட்ட உணவுப் பொருளொன்றென அதன் சுட்டுத்துண்டு அல்லது விளம்பரம் எதிலும் சுட்டிக்காட்டுதல் ஆகாது.

(v) ஒரே மாதிரியான உணவுப் பொருட்கள் தொடர்பிலான சுட்டுத்துண்டு ஒன்றில், ஒரே குணாதிசயம் கொண்டதென்ற உரிமைக் கோரலொன்று அல்லது கூற்றொன்று செய்யப்படுமிடத்து, அத்தகைய சுட்டுத்துண்டில் அல்லது விளம்பரத்தில் தேவைப்படுத்தப்பட்ட மொழியிலும் அதே மாதிரியான எழுத்திலும் மூலக் கூற்றிற்கு கொண்டிருக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தப்படல் வேண்டும்.

உ-ம்: - மரக்கறி எண்ணெயைக் கொண்டுள்ள கொள்கலனின சுட்டுத்துண்டானது, கொலஸ்ரோல் அற்றது என்ற உரிமைக்கோரலைக் கொண்டிருந்தால், அச்சுட்டுத்துண்டில் "மரக்கறி எண்ணெய்கள் கொலஸ்ட்ரோலைக் கொண்டிருப்பதில்லை" என்று குறிப்பிடுகின்ற வேறு ஒரு கூற்றானது மூல வாசகத்திற்கு மிகவும் அண்மையாக அதே மாதிரியான எழுத்துக்களிலும் மற்றும் அதே மொழியிலும் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(vi) பழ உற்பத்திப் பொருள் அல்லது தாவர உற்பத்திப் பொருள் அல்லது சீனியை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருள் எதுவும் அத்தகைய உற்பத்திகள் 100 கிராமிற்கு 40 மில்லி கிராமிற்கு குறையாத அளவில் அசுகோபிக் அமிலத்தைக் கொண்டிருந்தாலன்றி அவற்றிற்கான ஏதேனும் சுட்டுத்துண்டில் உயிர்ச்சத்து 'சீ' கொண்டு வலுவாக்கப்பட்டது அல்லது "வளமாக்கப்பட்டது' என்று விவரணப்படுத்துதல் ஆகாது.

8. (i) ஏதேனும் உணவுப் பொருள்கள் தொடர்பிலான சுட்டுத்துண்டில் அல்லது விளம்பரத்தில் விசேடமானவொரு உணவுத்திட்டப் பிரயோசனத்தைக் கொண்டுள்ளதெனக் காட்டும் உரிமைக் கோரல் அல்லது கூற்றொன்று பயன்படுத்தப்படுமிடத்து, அத்தகைய சுட்டுத்துண்டானது அல்லது விளம்பரமானது, அந்த உணவுப்பொருளானது எந்த உணவுத்திட்டத்திற்கென விதந்துரைக்கப்படுகின்றதோ அந்த உணவுத் திட்டத்தின் வகையைக் குறிப்பிடும் வெளிப்படுத்துகையொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்

(ii) ஏதேனும் உணவுப்பொருள் தொடர்பிலான சுட்டுத்துண்டில் அல்லது விளம்பரத்தில் குறைவான சோடியத்தின் உள்ளடக்கத்தைக் கொண்டதென்றதோர் கூற்று அல்லது உரிமைக்கோரிக்கையானது செய்யப்படுமிடத்து, சுட்டுத்துண்டானது அல்லது விளம்பரமானது அத்தகைய உணவுப் பொருளின் 100 கிராம்களில் உள்ளடங்கியுள்ள சோடியத்தின் அளவை மில்லி கிராம்களில் தெரிவிக்கும் வெளிப்படுத்துதல் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) ஏதேனும் உணவுப்பொருள் தொடர்பிலான சுட்டுத்துண்டெதுவும் அல்லது விளம்பரமெதுவும் -

(அ) நாளொன்றில் நுகர்வதற்கென நியாயமாக எதிர்பார்க்கப்பட்ட உணவுப்பொருள் வழங்குகின்ற சக்தியின் அளவு 300 கிலோ கலோரிகளாக அல்லாமலும்; மற்றும்

(ஆ) அத்தகைய சுட்டுத்துண்டு அல்லது விளம்பரம், அத்தகைய உணவுப் பொருளின் 100 கிராம்களால் வழங்கப்படும் சக்தியின் அளவைக் கிலோ கலோரிகளில் தருகின்ற மெய்யான கூற்றொன்றைக் கொண்டிருக்காமலும்

அத்தகைய உணவுப் பொருளானது, சக்தியை வழங்கும் அல்லது வலுவை அளிக்கும் ஒரு உணவுப்பொருளென்று நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ உரிமை கோருதல் ஆகாது.

9. ஏதேனும் உணவுப்பொருள் தொடர்பிலான சுட்டுத்துண்டு அல்லது விளம்பரம் எதுவும் -

(i) உணவுத்திட்டக் கொழுப்புகள், இருதய நோயினால் துன்பப்படுகின்ற ஆட்களுக்குப் பாதுகாப்பு ஒன்றென அல்லது அவர்களுக்கு நன்மை பயப்பனவென உரிமைகோருதல் ஆகாது.

(ii) அத்தகைய உணவுப்பொருளானது நோயாளிக்கு நலன் பயப்பதான, அல்லது ஏதேனும் சுகவீனத்தைச் சுகப்படுத்துவதான, நிவர்த்திசெய்வதான, அல்லது தடுப்பதான டானிக்கை, ஆரோக்கியமளிக்கும் மருந்தை அல்லது ஔடத இயல்பை அல்லது இயல்புகளைக் கொண்டுள்ளது என நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சுட்டிக்காட்டுதல் ஆகாது.

(iii) அத்தகைய உணவுப்பொருள் ஏதேனும் சுகவீனத்திற்கான பரிகாரம் ஒன்று என நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சுட்டிக்காட்டுதல் ஆகாது ;

(iv) அத்தகைய உணவுப்பொருளானது மெலிவதற்கான, நிறையைக் கட்டுப்படுத்துவதற்கான அல்லது நிறையைக் குறைப்பதற்கான வழிவகையொன்றென உரிமை கோருதல் ஆகாது ;

14. இவ்வொழுங்கு விதிகளில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப்படுத்தினாலன்றி-

'சட்டம்' என்பது, 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டம் எனப் பொருள்படும் ;

'பிரதான உணவு அதிகாரி' என்பது, சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

'பொதுப்பெயர்' என்பது, எப்பெயரின் கீழ் உணவுப்பொருள் பொதுவாக அடையாளம் காணப்படுகிறதோ அப்பெயர் எனப் பொருள்படும் ;

"உணவுறுதி இனிப்புண்டிகள்" என்பது ஜெலித்தயாரிப்புக்கள் மற்றும் புடிங் கலவைகள் என்பவற்றை உள்ளடக்கும்;

'மாவினால் தயாரிக்கப்பட்ட இனிப்புப் பண்டம்' என்பது, தன்னளவில் பூரணமானதும் (திரும்பச் சூடாக்குவதைத் தவிர) மேலதிகத் தயாரிப்போ அல்லது பதப்படுத்தலோ இன்றிப் பாவனைக்குகந்ததும், அதன் முக்கிய சேர்மானப் பொருளாக அரைத்த தானியத்தைக் கொண்ட ஏதேனும் திடமான அல்லது பகுதியளவில் திடமான உற்பத்திப் பொருள் என்று பொருளாவதுடன், சிறு பாண், ஊத்தப்பம், பூஞ்சப்பம், முறுகல், நெய்யப்பம், முட்டையப்பம், வாதுமை, அடை வகைகள், அடைக்கேக்கு ஆகியவற்றையும் மற்றும் காபோவைதரேற்று இனிப்புப் பொருள் சொக்லேற்று அல்லது கொக்கோ கலக்கப்பட்டதாயினும் சரி அல்லது பூசப்பட்டதாயினுஞ் சரி, அல்லாவிடினுஞ்சரி மெறிங், பெடிற், புளுவார்ஸ், சமைக்காத அடைவகை, அடைக்கேக்குகள் ஆகியவற்றையும் மற்றும் காபோவைதரேற்று இனிப்புப் பொருள், சொக்கலேற்று அலலதுகொக்கோ கலக்கப்பட்டாயினும் சரி அல்லது பூசப்பட்டதாயினும்சரி, அல்லாவிடினுஞ்சரி மெறிங், பெடிட், புளுவர்ஸ், சமைக்காத அடை வகை, அடைக்கேக்குகள் ஆகியவற்றையும் உள்ளடக்கும். ஆனால் பாண், விசுக்கோத்து, பீசா அல்லது நிரப்பும் சேர்மானப் பொருளொன்றைக் கொண்டிருக்கின்ற ஏதேனும் உணவுப் பொருள், அல்லது ஏதேனும் இறைச்சி, மீன், பாற்கட்டி, கழிவிறைச்சி, கிளிஞ்சல்கள், தாவரப் புரதப் பொருள் அல்லது நுண்ணுயிர்ப் புரதப் பொருள் என்பவற்றை உள்ளடக்காது ;

'பிரதான முகப்பு' என்பது, சில்லறை விற்பனைக்காக வழக்கமான நிலைமைகளின் கீழ் வெளிக்காட்டி வைக்கப்படுவதற்கு, முன்வைக்கப்படுவதற்கு, காட்சிக்கு வைக்கப்படுவதற்கு அல்லது சோதனை செய்யப்படுவதற்குக் கூடுதலான சாத்தியங் கொண்ட ஒரு சுட்டுத் துண்டின் பாகம் என்று பொருள்படும் ;

ஆயின் எவ்வாறாயினும், 'பிரதான முகப்பு' எனக் கொள்ளப்படும் பரப்பளவு பொதியின் அல்லது கொள்கலனின் அடியைத் தவிர்த்து மொத்த மேற்பரப்பின் 20 சதவீதத்திற்குக் (20%) குறைவாகவிருத்தலாகாது ;

'சீனியினால் தயாரிக்கப்பட்ட இனிப்புப் பண்டம்' என்பது தன்னளவில் பூரணமாகவுள்ளதும் மேலதிக தயாரிப்பு அல்லது பதனிடுகை எதுவுமில்லாது பாவனைக்குகந்ததாகவுள்ளதும், அதன் முக்கிய சேர்மானப் பொருளாக உண்ணத்தகு

கொழுப்பு, பாற்பண்ணைப் பொருள்கள், ஜெலற்றின், உண்ணத்தகு பசைகள், கொட்டைகள் அல்லது பாதுகாக்கப்பட்ட பழங்கள் ஆகியன சேர்க்கப்பட்டோ சேர்க்கப்படாமலோ இருக்கும் காபோவைதரேற்று இனிப்பூட்டும் பொருளைக் கொண்ட ஏதேனும் திடப்பொருள் அல்லது பகுதியளவிலான திடப்பொருள் என்று பொருளாகுமென்பதுடன், இனிப்புச் சேர்க்கப்பட்ட அதிமதுரத்தையும் சுயிங்கத்தையும் உள்ளடக்கும். ஆனால் சொக்லேற்றுத்தின்பண்டம், ஐஸ்கிறீம்கள், ஐஸ்லொலிகள், உணவு ஜெலிகள், உணவு ஜெலித் தயாரிப்புகள், மார்சிபன், மெரிங், இனிப்பான வாகடப் பொருட்கள் ஆகியவற்றை உள்ளடக்காது.

மொத்த விற்பனைப் பொதி" என்பது கொள்வனவு செய்பவரின் முன்னிலையில் கணக்கீடு செய்து, நிறுத்து அல்லது அளந்து விற்பனை செய்யும் ஏதேனும் உணவுப்பொருள் அடங்கிய பொதியொன்று அல்லது கொள்கலனொன்று என்று பொருள்படுவதுடன், ஏற்கனவே அடைக்கப்பட்ட சில்லறை அடைப்புக்கள் அடங்கிய கொள்கலனொன்றை உள்ளக்காது.

15. 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டு 1993 ஆம் ஆண்டு ஒற்டோபர் 14 ஆந் திகதி 788/7 ஆம் இலக்க *அதிவிசேட வர்த்தமானியில்* வெளியிடப்பட்ட 1993 ஆம் ஆண்டின் உணவு (சுட்டுத்துண்டிடுதலும் நானாவித) ஒழுங்குவிதிகளின் 1 ஆம் பிரிவுடன் சேர்த்து 2004 ஆம் ஆண்டு சனவரி 12 ஆந் திகதிய 1323/2 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2003 ஆம் ஆண்டின் உணவு (சுட்டுத்துண்டிடுதலும், விளம்பரப்படுத்தலும்) ஒழுங்கு விதிகள் இத்தால் நீக்கப்படுகிறன.

## அட்டவணை I

அ. விசுக்கோத்துக்கள் :- சீஸ்பிட்ஸ், கிறீம் கிரேக்கர்ஸ், பிறேன் கிரேக்கர், குரக்கன் கிரேக்கர், கிறிஸ்கோ, லெமன் பப், மாரி, ஜின்ஜர் நட்ஸ், நைஸ், குக்கீஸ், வேப்பர்ஸ்.

ஆ. இறைச்சி உற்பத்திகள் :- பசிகாமொடடெலா, பிறட் வஸ்ட், போக்கீஸ், சலாமிலிங்குஸ், சிப்லொட்டஸ், பரட்வர்ஸ்ட், பிரங்பேட்டஸ், லஞ்சன் மீற், பற்றே, மீற்லோப், மீற்போல்ஸ் சிக்கன் றோல்ஸ்.

இ. விசேட நியுனா :- அம்புல் தியல்

ஈ. கார்பனேற்றிய மென் பானங்கள் :- காபனேற்றிய மென்பானங்கள் விடயத்தில் பொதுப் பெயர் தேவைப்படுத்தப்படமாட்டாது.

## அட்டவணை II

ஒழுங்கு விதி 5 (உ)

| நிரல் I<br>ஆகக்குறைந்த உயரம் | நிரல் II<br>சுட்டுத்துண்டின் பிரதான முகப்பின் பரப்பளவு |
|---|---|
| 1 மி. மீ. | திரவப் பாலையும், காபனேற்றப்பட்ட நீரையும் கொண்ட போத்தல்களின் மூடிகளில் |
| 1.5 மி. மீ. | 120 சதுர சென்ரி மீற்றருக்கு மேற்படாதவை |
| 3 மி. மீ. | 120 சதுர சென்றி மீற்றருக்கு மேற்பட்டதும் 240 சதுர சென்ரி மீற்றருக்கு மேற்படாமலும் |
| 6 மி. மீ. | 240 சதுர சென்ரி மீற்றருக்கு மேற்பட்டதும் 600 சதுர சென்ரி மீற்றருக்கு மேற்படாமலும் |
| 9 மி. மீ. | 600 சதுர சென்ரி மீற்றருக்கு மேற்பட்டவை. |

## அட்டவணை III

*ஒழுங்கு விதி 7 (2)*

| *பொருள்* | *பழரசம் இருக்க வேண்டிய அளவு* |
|---|---|
| பழப்பானங்கள் மற்றும் நீர் கலக்காமல் குடிப்பதற்கு தயாராகவுள்ள பானங்கள் | 5% சதவீதத்துக்கு குறையாத பழச்சாறு |
| பழத்தேன் | 15% சதவீதத்துக்குக் குறையாத பழச்சாறு |
| பழத்தின் பிழிவு, பழச்சாறு, பழப்பிழிச்சாறு மற்றும் பழப்பாணி | 25% சதவீதத்துக்குக் குறையாத பழச்சாறு |
| செறிவான பழரசம் | 45% சதவீதத்துக்குக் குறையாத பழச்சாறு |

## அட்டவணை IV

### இலங்கையர்களுக்கு சிபார்சு செய்யப்பட்டுள்ள நாளாந்த உணவின் அளவு - 1998

| குழுக்கள் | விபரம் # | உடல் நிறை ## | தேறிய சக்தி | | புரதம் * | சுண்ணாம்புச் சத்து | இரும்பு ** | உயிர்ச்சத்து 'ஏ' | தயமின் | இரிபோ பிளேபின் | நியாசின் | அசுகோபிக் அமிலம் | போலிக் அமிலம் | உயிர்ச் சத்து 'பி' |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | கி.கி | கி. கலோரி/ | கி/யூ) நாளாந்தம் | கி. நாளாந்தம் | மி.கி./ நாளாந்தம் | மி.கி./ நாளாந்தம் | மைக்ரோ.கி/ நாளாந்தம் | மி.கி./ நாளாந்தம் | மி.கி./ நாளாந்தம் | மி.கி./ நாளாந்தம் | மி.கி./ நாளாந்தம் | மை.கி./ நாளாந்தம் | மை.கி. நாளாந்தம் |
| ஆண் | இருந்துகொண்டு செய்யும் வேலை | 60 | 2475 | [10350] | 53 (45) | 400 | 17 | 600 | 1.2 | 1.5 | 16 | 40 | 200 | 1.0 |
| | சாதாரண வேலைகள் | | 2840 | [11880] | ,, | ,, | ,, | ,, | 1.4 | 1.7 | 19 | ,, | ,, | ,, |
| | பாரமான வேலைகள் | | 3350 | [14010] | ,, | ,, | ,, | ,, | 1.7 | 2.0 | 22 | ,, | ,, | ,, |
| பெண் | இருந்து கொண்டு செய்யும் வேலை | 50 | 1920 | [8030] | 44 (38) | 400 | 19 | 600 | 1.0 | 1.2 | 13 | 40 | 200 | 1.0 |
| | சாதாரண வேலைகள் | | 2020 | [8450] | ,, | ,, | ,, | ,, | 1.0 | 1.2 | 13 | ,, | ,, | ,, |
| | பாரமான வேலைகள் | | 2240 | [9370] | ,, | ,, | ,, | ,, | 1.1 | 1.3 | 15 | ,, | ,, | ,, |
| | கர்ப்பம் தரித்தவர்களின்- பூரண செயலாற்றல்கள் | | +285 | [1200] | 47 (6) | 1000 | 23 | 600 | +0.2 | +0.2 | +2 | 40 | 500 | 1.5 |
| | குறைவான செயலாற்றல்கள் | | +200 | [850] | ,, | ,, | ,, | ,, | +0.1 | +0.2 | +1 | ,, | ,, | ,, |
| | பாலூட்டும் தாய்மார்களின் 0 – 6 மாதங்கள் | | +500 | [2100] | +21 (18) | 1000 | 19 | 950 | +0.3 | +0.3 | +3 | 80 | 250 | 1.5 |
| | 6 – 12 மாதங்கள் | | +500 | [2100] | +15 (13) | ,, | ,, | ,, | +0.3 | +0.3 | +3 | ,, | ,, | ,, |
| குழந்தைகள் | 03 – 06 மாதங்கள் | 7.0 | 700 | [2930] | 27 (13) | 500 | | 350 | 0.4 | 0.4 | 5 | 25 | 21 | 0.2 |
| | 06 – 09 ,, | 8.5 | 810 | [3390] | 29 (14) | ,, | ,, | ,, | 0.4 | 0.5 | 5 | ,, | 26 | ,, |
| | 09 – 12 ,, | 9.5 | 950 | [3970] | 29 (14) | ,, | ,, | ,, | 0.5 | 0.6 | 6 | ,, | 29 | ,, |
| சிறுவர்கள் | 01 – 02 வருடங்கள் | 11.0 | 1150 | [4810] | 29 (14) | 400 | 7 | 400 | 0.6 | 0.7 | 8 | 40 | 33 | 0.2–1 |
| | 02 – 03 ,, | 13.5 | 1350 | [5650] | 30 (15) | ,, | 8 | ,, | 0.7 | 0.8 | 9 | ,, | 41 | ,, |
| | 03 – 05 ,, | 16.5 | 1570 | [6570] | 36 (18) | ,, | 10 | ,, | 0.8 | 0.9 | 10 | ,, | 50 | ,, |
| ஆண் பிள்ளைகள் | 05 – 07 வருடங்கள் | 20.5 | 1850 | [7740] | 31 (21) | 400 | 12 | 400 | 0.9 | 1.1 | 12 | 40 | 62 | 0.2–1 |
| | 07 – 10 ,, | 27.0 | 2100 | [8790] | 41 (27) | ,, | 16 | 600 | 1.1 | 1.3 | 14 | ,, | 81 | ,, |
| | 10 – 12 ,, | 34.5 | 2200 | [9200] | 53 (34) | 600 | 20 | ,, | 1.1 | 1.3 | 15 | ,, | 104 | ,, |
| | 12 – 14 ,, | 44.0 | 2400 | [10040] | 67 (44) | ,, | 23 | ,, | 1.2 | 1.4 | 16 | ,, | 132 | ,, |
| | 14 – 16 ,, | 55.5 | 2650 | [11090] | 80 (52) | ,, | 29 | ,, | 1.3 | 1.6 | 17 | ,, | 167 | ,, |
| | 16 – 18 ,, | 64.0 | 2830 | [11840] | 88 (58) | 500 | 34 | ,, | 1.4 | 1.7 | 19 | ,, | 192 | ,, |
| பெண் பிள்ளைகள் | 05 – 07 வருடங்கள் | 20.5 | 1750 | [7322] | 31 (21) | 400 | 12 | 400 | 0.9 | 1.1 | 12 | 40 | 62 | 0.2–1 |
| | 07 – 10 ,, | 27.0 | 1810 | [7573] | 41 (27) | ,, | 16 | 600 | 0.9 | 1.1 | 12 | ,, | 81 | ,, |
| | 10 – 12 ,, | 36.0 | 1950 | [8160] | 55 (36) | 600 | 21 | ,, | 1.0 | 1.2 | 13 | ,, | 108 | ,, |
| | 12 – 14 ,, | 46.5 | 2100 | [8790] | 67 (44) | ,, | 18 | ,, | 1.1 | 1.3 | 14 | ,, | 140 | ,, |
| | 14 – 16 ,, | 52.0 | 2150 | [9000] | 72 (47) | ,, | 20 | ,, | 1.1 | 1.3 | 14 | ,, | 156 | ,, |
| | 16 – 18 ,, | 54.0 | 2150 | [9000] | 66 (43) | 500 | 21 | ,, | 1.1 | 1.3 | 14 | ,, | 162 | ,, |

\# எல்லா வயது வீச்சுக்களும் தரப்பட்ட மாதத்தில் அல்லது வருடத்தில் தொடங்கி அத்துடன் தரப்பட்ட மாதத்தின் அலலது வருடத்தின் ஒரு தசமத்தினால் குறைந்த எண்ணில் முடிவடையும். (உ-ம் ; 3-6 மாதங்கள் = 3-5.99 மாதங்கள்)

\## உடல் நிறையானது வயது வீச்சின் நடுப்புள்ளியில் உள்ளவாறு இருக்கும் (என். சி. எச். எஸ்)

* அடைப்புக்களுக்குள்ளேயுள்ள பெறுமானங்கள் புரதங்களின் தேவைப்பாட்டைக் குறிப்பிடுபவையாகும்.

** (அரிசியை அடிப்படையாகக் கொண்ட திட்ட உணவில்) திட்ட உணவு இரும்பு உறிஞ்சுகையை அடிப்படையாகக் கொண்டது.
வளர்ந்த ஆண்களுக்கு, குழந்தைகள் மற்றும் வளரும் ஆண் பிள்ளைகளுக்கு 5%, வளரும் பெண்கள், வளர்ந்த மற்றும் பாலூட்டும் பெண்களுக்கு 8%, கர்ப்பிணிப் பெண்களுக்கு - 13.3%
(உ. சு. தா. சிபார்சுகள் 1985 ஐ அடிப்படையாகக் கொண்டது ; இரும்புச்சத்துக்கான சிபாரிசுகள் 1990 இன் ஐ. சி. எம். ஆர். விதப்புரைகளை அடிப்படையாகக் கொண்டது.)

## அட்டவணை V

விளக்கக் குறிப்புக்கள் :

(அ) ***போஷாக்கு உரிமைகள்:***

(i) உணவொன்றின் போஷாக்கு மட்டத்தை விபரிக்கும் போஷாக்கு உரிமை போஷாக்கின் உள்ளடக்கம் எனக் கருதப்படும்: (*உதாரணம்.*- "கல்சியத்தின் தோற்று நார்கள் மலிந்துள்ளவைகள்", "கொழுப்பு குறைவாக உள்ளது") ஒப்புநோக்கும் உரிமைக் கோரல் என்பது இரண்டு உணவுப் பொருட்களின் அல்லது அதற்கு மேலதிகமான உணவுப்பொருளின், போஷாக்கு மட்டத்தையோ அல்லது சக்தியின் பெறுமதியையோ ஒப்புநோக்கும் உரிமைக்கோரலாகும். (*உதாரணம்.*- "குறைந்த", "மிகக் குறைத்த", "மிகவும் சொற்ப", "அதிகரித்த", "மிகவும் அதிகரித்த")

(ii) "போஷாக்கு செயலாற்றல் உரிமைக்கோரல்" என்பது உடம்பின் வளர்ச்சி அபிவிருத்தியுடன் பொதுவாக செயலாற்றல்களுடன் உடம்பின் செயற்பாட்டை விபரிக்கும் போஷாக்கு உரிமைக்கோரலாகும். (*உதாரணம்:*- பலமுள்ள", "பற்களினதும் எலும்புகளினதும் வளர்ச்சிக்கும் கல்சியம் உபயோகப்படும்", "உடம்பின் கலங்களை உற்பத்தி செய்வதற்கும் அவைகளைப் புதுப்பிப்பதற்கும் புரோட்டீன் உபயோகப்படும்". "செங்குருதித் துணிக்கைகளை உற்பத்தி செய்வதற்கு இரும்பு அத்தியாவசியமாகும்". விற்றமின் "ஈ" உடம்பின் கலங்களின் கொழுப்புச் சத்தை ஒட்சியேற்றத்திலிருந்து தடுக்கும். "போலிக அமிலம் அடங்கியுள்ளது". போலிக் அமிலம் கருவின் பொதுவான வளர்ச்சிக்கு உதவுகின்றது".)

(ஆ) போஷாக்கின் உள்ளடக்கம் தொடர்பான உரிமைக்கோரல்கள் செய்யப்படும் பொழுது *பட்டியல்* 'அ' இல் குறிப்பிடப்படுள்ள நிபந்தனைகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(இ) உணவின் இயல்பான போஷாக்கு அதாவது உரிமைக்கோரலின் விடயமாகவுள்ள போஷாக்கு குறைவாயின் அல்லது இல்லையாயின், உணவின் பெயருக்கு உடன் முன்னால் போஷாக்கு மட்டம் குறிப்பிடப்பட்டுள்ள பதத்தைக் குறிப்பிடுதல் கூடாது என்பதுடன், அதற்கு பதிலாக "(போஷாக்கின் பெயர்) குறைந்த உணவு" அல்லது "(போஷாக்கின் பெயர்) இல்லாத உணவு" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(ஈ) கீழே குறிப்பிடப்பட நிபந்தனைகளைப் பூர்த்திசெய்த, தற்கமைவாக உடம்பில் போஷாக்கு செயலாற்றல் தொடர்பான போஷணை செயலாற்றுதல் உரிமைக்கோரல்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது:-

(i) இவ்வொழுங்கு விதிகளுக்கான IV ஆம் அட்டவணையின் கீழ் போஷணைச் சிபார்சு பெறுமதி என். ஆர். வீ. (N. R. V) தாபிக்கப்பட்டுள்ள அத்தியாவசியமான போஷணைகளுக்கு மட்டுமே ஆகும்.

(ii) போஷணை உரிமைக்கோரல் செய்யப்படும் உணவுப்பொருள் அதற்கான உணவில் குறிப்பிடத்தக்க அளவு வளமுடையதாக இருத்தல் வேண்டும்.

(iii) போஷணை செயலாற்றல் உரிமைக்கோரிக்கையான பிரதான உணவு அதிகாரியால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள விஞ்ஞானரீதியிலான இணக்கத்தின் அடிப்படையின் மீது செய்யப்படுதல் வேண்டும்.

(iv) நோயொன்றுக்குச் சிகிச்சையாக அல்லது நோயொன்றிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அப்போஷாக்கு உதவி அளிப்பதெனக் குறிக்கும் பயனைக் கொண்ட ஏதேனும் கூற்று உரிமைக்கோரலில் உட்படுத்தப்படாதிருத்தல் வேண்டும்.

**பட்டியல் 'அ'**

| உள்ளடக்கம் | உரிமைக் கோரல் | நிபந்தனைகள் இற்கு அதிகமாகக் கூடாது |
|---|---|---|
| சக்தி | குறைவு | 40 கி. கலோரி (270 கி. யூல்) 100 கி. க்கு (திட உணவு)<br>20 கி. கலோரி (85 கி. யூல்) 100 கி. க்கு (திரவம்) |
| | இல்லாதது | 4 கி. கலோரி 100 மி. லீ. க்கு (திரவம்) |
| கொழுப்பு | குறைவு | 3 கிராம்/ 100 கிராமுக்கு (திட உணவு)<br>1.5 கிராம் 100 மி. லீ. க்கு (திரவம்) |
| | இல்லாதது | 0. 5 கிராம் 100 கி. க்கு (திட உணவு) அல்லது 100 மி. லீ. க்கு (திரவம்) |
| ஊறிய கொழுப்பு | குறைவு | 1.5 கிராம, 100 கி. க்கு (திட உணவு)<br>0.75 கிராம், 100 மி. லீ. க்கு (திரவம்) மற்றும் 10% சக்தி |
| | இல்லாதது | 0. 1 கிராம் 100 கி. க்கு (திட உணவு)<br>0. 1 கிராம் 100 மி. லீ. க்கு (திரவம்) |
| கொலஸ்ரோல் | குறைவு | 0.02 கிராம், 100 கிராமுக்கு (திட உணவு) மற்றும் 1.5 கிராம் ஊறவைக்கப்பட்ட கொழுப்பு 100 கிராமுக்கு<br>0.01 கிராம், 100 மி. மீ. க்கு (திரவம்) மற்றும் 0.75 கிராம் மற்றும் ஊறவைக்கப்பட்ட கொழுப்பின் 10% சக்தி |
| | இல்லாதது | 0.005 கிராம், 100 கிராமுக்கு (திட உணவு) மற்றும் 1.5 கிராம் ஊறவைக்கப்பட்ட கொழுப்பு 100 கிராமுக்கு<br>0.005 கிராம், 100 மி. லீ. க்கு (திரவம்) மற்றும் 0.75 கிராம் ஊறவைக்கப்பட்ட கொழுப்பின் 100 மி. லீ. க்கு மற்றும் ஊறவைக்கப்பட்ட கொழுப்பின் 10% சக்தி |
| சீனி | இல்லாதது | 0.5 கிராம், 100 கிராமுக்கு (திட உணவு)<br>0.5 கிராம், 100 மி. லீ. க்கு (திரவம்) |
| சோடியம் | குறைவு<br>மிகக்குறைவு<br>இல்லாதது | 0.12 கிராம், 100 கிராமுக்கு<br>0.04 கிராம், 100 கிராமுக்கு<br>0.005 கிராம், 100 கிராமுக்கு |

1. "குறைவான ஊறிய கொழுப்பு" என்ற உரிமைக்கோரலின் விடயத்தில் ஏற்புடையதாகவிருக்குமிடத்து மாற்றுக் கொழுப்பு அமிலங்கள் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். இந்த ஏற்பாடு குறைவான கொலஸ்ரோல் அத்துடன் கொலஸ்ரோல் இல்லாதது என்ற உரிமைக் கோரல்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.